முருகன் துணை.

# ஸ்ரீ மாணிக்கவாசக வெண்பா.

துரை காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ப்ரும்மஸ்ரீ

சுப்பராம ஐயரவர்கள் மாணாக்கரும்,

ரை ஸெயிண்டுமேரீஸ்ஹைஸ்கூல்தமிழ்ப்பண்டிதரும்

ரீ ஞானசம்பந்தஸ்வாமிகள் ஆதீன

வித்துவானுமாகிய

## மு. கோவிந்தசாமி ஐயரால்

இயற்றப்பெற்று,

பிள்ளையார்பட்டி
ாங் ராம.மு.சோம.சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்
பொருளுதவியால்,

ரை, எக்ஸல்ஸியர் பிரஸில் பதிப்பிடப் பெற்றது.

1918

# ஸ்ரீமாணிக்கவாசக வெண்பா.

## சிறப்புப்பாயிரம்.

### மதுரை வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ
### ரா. அருணாசலக்கவிராயரவர்கள் இயற்றியன.

ரவிந்தன் போலுங் குறுமுனிகைக் குள்ளடங்கா
ரவிந்தம் போல்வளர்சீர் மாமதுரைக் —கோவிந்த
பிதிரு வாதவூர்ச் சாமி சரிதவெண்பாப்
சொழச் சொற்றான் புகழ்ந்து.

லும் பொருளின் சுவையறியா தோர்நெஞ்சக்
லு நெகிழ்ந்து கசிந்துருகும் —புல்லுமின்
மூதம் போலுமிவ்வெண் பாவை படிக்கிலிதன்
மைவர் சொல்வார் தெரிந்து. 2.

### வாவடுதுறை யாதீனவித்வான் மகா-ா-ா ஸ்ரீ
### மு. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள்
### இயற்றியன.

தரு மன்மேன்மை யார்ந்தோன் பொறைநீதி
தரு மன்போன்றான் மேன்மனையுஞ்—செஞ்சுதருஞ்
திருக்குங் கோவிந்த சாமிமறை யோனூலை
ந்திருந்தா லத்தினிலுற் றோர்.

பாத வூக்கமுட னேநிபுலப் பெய்த
வாத வூரார்கதை செய்தான் —வருமுதப்பா
ரகவிதை யானுங்கண் டாய்ந்து களிப்படைந்தேன்
ரகவிதை யாக மதிக்க.

## மதுரை வித்வான் மகா-ா-ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள் இயற்றியன

திருவாத வூரடிகள் சீரெல்லாம் யாரு
மொருவாத பேரன்பா லோதிக் —கருவாக
னீக்கமுறற் பாவா னிகழ்த்தினா னெஞ்சுருக்கும்
வாக்கமுதப் பாலுதவு வான்.

கண்டவரு முன்னாட் கனியச் சிவபூசை
பண்டிமி [illegible] ன்டுமுனி பாலினைப்போன் —மண்டிமண்ட
னித்தம் புரிவா னிறைகுணத்தா னல்வேத
வித்தகன்கோ விந்தசாமி.

## மதுரை ஸ்ரீ மீனாக்ஷி தேவஸ்தானம் கமிட்டி மெம்பர் மகா ா ா ஸ்ரீ வயி நாக. ராம இராமநாதன் செட்டியார் அவர்கள் இயற்றியன.

வானேறிச் சத்திக்த மாணிக்க வாசகர்தந்
தேனேறத் தித்திக்குஞ் செய்யுளெலா —மானேறு
மாதியன்பின் வெண்பாக்க ளான்மொழிந்தான் மெய்
வேதியன்கோ விந்தசாமி. [மதுரை

நண்பா வெனயா னவின்றமைக்கு மன்னவன்சொல்
வெண்பா வொருபா விதமென்பார் —பண்பார்
கரும்பாவென் பேனிந்தக் காசினிமற் றொன்றும்
விரும்பா திதுதுய்த்த மேல்.

## மகிபாலன்பட்டி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் இயற்றியன.

அன்பு நெறியின் றநற்கடிமை யாய்ச்சைவ
மன்புலமார் மாணிக்க வாசகர்தாம் —இன்பங்
குலவுசரி தந்தந்தான் கோவிந்த சாமிப்
புலவன்றென் பாவிற் புகன்று. 1

இன்னபொரு ளாலே பெறுமெளிதுகொளப்
பன்னெறித் திரத்திற் பதித்தளித்தான் —மன்னுபிறைக்
கோலமுடி யார்க்கன்பு கூர்சோம சுந்தரப்பேர்ச்
சீல னுவகை சிறந்து. 2.

சிவனடியார் சிந்சரிதஞ் செப்பல் பலர்க்கு
முவகை யுறவளித்த லன்ன —விவையெலாம்
புண்ணியங்கள் சாலப் புரிந்திதோர் தமக்கன்றி
பண்ணினவர்க் குமாவா மற்று. 3.

முருகன் துணை.

# ஸ்ரீ மாணிக்கவாசக வெண்பா.

## விநாயகர் காப்பு.

மாமருவு மாணிக்க வாசகர்த மாக்கதையைப்
பாமருவும் வெண்பாவாற் பாடவே — தூமருவி
யாரணத்தின் முன்னா ரமைபிரண வத்துருவா
வாரணத்தை முன்பரசு வாம். 1

## சிவ பெருமான்.

கங்கைமுடி யுங்கா ளகண்டமுமுக் கண்ணுஞ்சீர்
தங்குஞ் சதுர்ப்புயமுந் தையலார் — பங்கு
மறையாளவாச் செய்ய மலர்த்தாளு நெஞ்சை
யிறையளவும் விட்டகலா வே. 2

## ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள்.

அல்லும் பகலு மரனடியைச் சிந்தித்துக்
கல்லுங் கரையக் கனிந்துருகிச் — சொல்லுந்
திருவா சகமுரைத்த செல்வரடி யேத்தி
மருவா சகற்றிவாழ் வாம். 3

## அவையடக்கம்.

முன்னமொரு மொய்க்குழலின் மூங்கை தவிர்த்தவளைப்
பண்ணும் படிசெய்த பண்புடையா —ரென்னுடைய
வெள்ளறிவின் சொல்லை விழுமியசொல் லாக்குவரென்
றுள்ளியிதைச் சொற்றே னுவந்து. 4

## நூல்

தேவியுட னீசரனுஞ் செங்கைவடி வேலவனு
மாலவனுடன் மேவி யரசுரிமை —யோவறவே
கொற்றமொடு கொண்டுயர்செங் கோலோச்சு நாடாகு
நற்றவர்வா ழும்பாண்டி நாடு. 5

நாடுந் தருமமுத லொன்றுஞ், சைவனபோற்
கூடும் பொருனை குமரிவா —ளொடுவரும்
வேகவதி வெண்குடிலை மேவுதிரு நாடாகு
நாகர்புக ழும்பாண்டி நாடு. 6

அன்பர் மகிழ வறுபத்து நான்கா
லின்பமுற வீச னியற்றிடமா —மன்புலியாம்
பெண்ணின் முகமாகும் பெட்பார் வளமனைத்து
நண்ணும் வழுதியர்நன் னாடு. 7

சரியை முதனான்குந் தானைகளாய்ப் பத்தி
பெரிய படையாய்ப் பிறங்குந் —திருநீறு
பூட்டுங் கவசமாய்ப் பூண்டுபிறப் பைத்தெறுஞ்சீர்
நாட்டுங் கவுரியர்நன் னாடு. 8

இந்தவள நாட்டி லிருக்கும் பலதலத்துண்
முந்துந் தலமாகு முத்துவனை —யுந்திவரும்
வையைக் கரையுளது வாதவூ ரன்பர்களை
யுய்யக் கரையேற்று மூர். 9

இன்னசீர் கொண்ட வெழில்வாத வூரதனின்
மன்னு மதியுறும மாத்தியருட் —பன்னுந்
துறைபுகழச் சம்புபா தாசிருத ருற்றார்
மறைபுகலும் வாயராய் வாய்ந்து. 10

வேத நெறியான் மிகுசைவத் தாற்றிருந்து
மாதுசிவ ஞான வதியென்னும் —போதுறையு
மின்னனையா ரிற்கிழமை மேவ மறையவரு
மன்னிரு ரில்லறத்தில் வாழ்ந்து. 11

வாழ்ந்துவரு நாளின் மறைமார்க்கம் பூவுலகி
லாழ்ந்துபுற மார்க்க மதிகரிக்கச் —சூழ்ந்தவர்க
ளொன்றுங் குறும்பொழிப்பா னென்றமொரு சேயருளக்
கண்ணுதலை வேண்டினார் கண்டு. 12

கண்ணுதலை வேண்டிக் கதிருதயஞ் செய்முன்னர்த்
தண்ணியநன் னீராடிச் சாற்றுமுறை —வெண்ணிறமார்
நீறுடனே கண்மணியு நேர்தரித்தே யைந்தெழுத்தை
நூறுடனே யெட்டுரைத்தார் நோற்று. 13

வண்டுலவு நந்த வனம்போய் மலர்பறித்தே
யிண்டையொடு மாலை யிசைத்தணிந்து —தொண்டர்களைப்
பேணி யுபசரித்துப் பெம்மான் விழாவணியைக்
காணுவார் வாழ்ந்துவருங் கால். 14

ஓதுமறை மார்க்க மொழித்துப் பிடகநெறி
யாதியது முத்திதரு மாறென்று —வாதமுறுந்
தீயபடு பாதகரே சென்றடர்ந்தார் செந்தமிழ்சேர்
தேயமெலாந் தீமைசெறித் தே. 15

கண்டமுனி வோரிமையோர் கற்ப நிழலுறைவோன்
புண்டரிகப் போதுறைவோன் பொன்னுடை —கொண்ட
மாயன் முதலானோர் வந்தார் திருக்கைலை [நெடு
மேய வரற்குரைக்க வே. 16

கோயிற் றிருமுன்னர்க் கோல்கொண் டுறைநந்தித்
தூயரிடம் வேண்டிச் சொலச் செய்தார் —போயவரு
மன்னோர் வரவை யரற்குரைக்கக் கேட்டவனு
முன்னு வழையென்றான் முன். 17

நந்தி யருளப்போய் நாதனது தாள்பணிந்து
பந்தியினி னிற்கப் பரிந்தவனும் —வந்தவினை
யேதா மெனக்கழற வேத்தித் திருமாலு
மோதாநின் றனங் குவந்து. 18

வையமெலாஞ் சைவரப்போர் வையரே மிக்கதனாற்
றுய்யநெறி முற்றுந் தொலைந்ததா —னெய்யமுனி
லாற்றுவினை யில்லை யமர ரறப்பசித்தார்
மாற்றுவதுன் பாரமென்றான் மால். 19

சாக்கியர்க டம்வலியைச் சங்கரனார் கேட்டதனைப்
போக்குவம்யா மென்னப் புகன்றருள —வேக்கமெலா
நீங்கித் தொழுதமரர் நின்மலன்றன் னீடருளைத்
தாங்கித்தங் கோயிலடைந் தார். 20

ஆயவிதை யெண்ணவர னந்நாட் கணநாத
ராயிரவர் வந்தவனை யர்ச்சித்துத் —தூயவா
வோதியமெய் யாகமத்தி னுண்மையடி யேமுணர
வாதியரு ளென்று ரடைந்து. 21

என்றவர்கள் வேண்ட விறைவ னருள்சுரந்து
நன்றுவட கோசமங்கை நாடியே —சென்றடைமி
னங்கியாந் தோன்றி யருள்வோ மெனக்கழறப்
புங்கவரு மங்கடைந்தார் போய். 22

போயவரு மன்புடனே புண்ணியநன் னீராடித்
தூயதிரு நீறணிந்து தோத்திரிக்க —நாயகனே
ரந்தணன்போ லங்கடைந்தா னாயிரவர் தேர்ந்தடியில்
வந்துவிழுந் தேத்தினார் மன். 23

உற்ற கணத்தவரை யோர்பா லரனிருத்திப்
பற்றுமுறை யாகமத்தைப் பண்பாகச் —சொற்றிடனு
மைம்புலனு நெஞ்சுவழி யாக வமைந்திருந்தா
ரெம்பெருமா னோதுவதை யேற்று. 24

புண்டரிக மாயிரத்தைப் பூத்தோர் புனல்பொருந்திக்
கொண்டொருகார் வெள்ளிமலை கூடுதல்போ —லண்டர்பி
னுக்க வணியோ டயிரா வதத்தமர்ந்து [ரா
யார்க்கப் பவனிவந்தான் பார். 25

கண்ணுதன்முன் னின்ற கணத்தொருவ ரிவ்வளத்தி
லெண்ணஞ் சிறிதுய்த் திருந்தரன்றன் —பண்ணமையும்
வாசகத்தை முற்று மறந்தார்கண் டால்வளத்தி
லீசனையுறார் தாமுலகி லார். 26

கண்ட விறைவன் கடுஞ்சினங்கொண் டன்னவரை
மண்டலத்திற் புக்கோர் மனிதவுடல் —கொண்டுமிகு
மாக்கவலைத் துய்த்தே யடைவாய் நமையென்று
போக்கினரா லுள்ளம் புகைந்து. 27

கேட்ட கணநாதர் கெட்டேன்கெட் டேனென்று
வாட்டமொடு நின்று மறுகுதலும் —நாட்டமொரு
மூன்றுடையான் பின்னுன் முடியி னமதடியை
யூன்றியருள் வோமென்றா னோர்ந்து 28

ஈசன் விடைதாங்கி யேகிக் கணநாதர்
வாசப் பொழில்விளங்கும் வாதவூர் —வாசமுறுஞ்
செய்யசம்பு பாதா சிருதர் திருத் தேவிகருப்
பையுறைய லுற்றார் பரிந்து. 29

உற்ற கருப்பத்திற் கூறென்றுஞ் சாராது
சொற்ற சடங்கைச் சுருதிவழி —கற்றவரும்
வேதியரைக் கொண்டு விரிவா நடப்பித்தே
யாதியருள் வேண்டினா ராங்கு. 30

காவிமலர்க் கண்குழியக் காய்புளிமண் ணாதியவை
யாவலுட னேநுகர்ந்தவ் வம்மையார் —மேவுமதி
யத்தடையப் பண்பாயோர் பாலற் பெறநின்றோ
ரெத்தலமுங் கொண்டாட வே. 31

திங்களொரு பத்துஞ் செறிந்துவரத் தேசமெங்கு
மங்கலமே யோங்க மறையோங்கத் —துங்கமிக
வோங்காக மங்களெலா மோங்கத் தமிழ்மொழியே
பாங்காக வோங்கப் பரிந்து. 32

செங்கதிரோ னுதியகோ டோர்ந்தநல்ல தானமுற
மங்கையொரு பாகன் மலரடியிற் —றுங்கமுறும்
பத்திமிக வோங்கப் பரசமயம் பாழாக
வெத்திசையு மேத்தெடுப்ப வே. 33

வானவர்கள் வாழ்த்தி மலரிறைக்க நற்றினத்தின்
மானனைய ஞான வதியாரின் —மானமிகுஞ்
செய்யவயின் விட்டுத் திருவவதா ரஞ்செய்தார்
வையகத்தை வாழ்விப்பான் வந்து. 34

தந்தையார் கேட்டுடனே தண்புனலிற் றோய்ந்துவந்து
முந்தவிதை தான முகந்தளித்தார் —பைந்தொடியா
ரேழாநாட் காப்பணிந்தே யென்ற பிறசடங்குந்
தாழாதே செய்துகளித் தார். 35

கருவார்தை தீர்த்துநமைக் காக்கவருஞ் சேய்க்குத்
திருவாத வூரரெனச் செப்பு —மொருநாமம்
வைத்தழைக்க லானார் மதிபோ லவர்வளர்ந்தார்
மெய்த்தவமே போல விரிந்து. 36

நல்லார் செயுமறங்க ணாளும் வளர்வனபோல்
வல்லார் மகனார் வளர்ந்தனரால் —சொல்லாருஞ்
செங்கீரை யாதியாச் செப்பும் பருவங்க
ளங்கீரைந் துங்கடந்தா ரால். 37

வேதச் சிகையை விரித்தருள்வரர்க் கோர்சிகையை
யோதச் சமைத்தே யுரிமையுடன் —போதத்து
மூன்றா னிறைமனத்து மொய்ம்புடையா ரென்பதுபோன்
மூன்றா றரிப்பித்தார் முன். 38

சாற்றுபதி ஞுண்டுட் டக்க கலைகளிலே
யேற்றமிகப் பெற்றே யிலகினரா —னூற்றுறையி
லையமுற்றால் யாரு மணிவாத வூரடைந்தெம்
மைய மிடந் தெளிவா ரால், 39

வண்டமிழின் வாசமொடு வான்பொதியத் தாரமணங்
கொண்டுலவுந் தென்றல் குலவியுறும் —பண்டை
வழுதிமா நாடென்னு மங்கைமுக மாகும்
பழுதிலாக் கூடற் பதி. 40

மாத ரிசையொலியு மாந்தர் பரவொலியு
நாதன் விழாவொலியு நாடோறும் —போதுடனே
விண்ணவர்கள் வந்து விமலனடி யேத்தொலியு
நண்ணுவதாங் கூட னகர். 41

வானளவு மாட மதிதவழுங் கோயில்பல
தான நிறைசாலை தையலார் —கானமுட
னாட்டம் பயிலு மரங்கம் பலமிகுஞ்சீர்
நாட்டு மதுரை நகர். 42

அந்த நகரை யரிமர்த் தனவழுதி
முந்தை மனுமுறையின் மொய்ம்புடனே —சொந்த
வுயிர்போற் குடிகளுயி ரோம்பிப் புரந்தான்
செயிரமரி லேறுச் சிறந்து. 43

கோலனுவுங் கோடாக் குடைவேந்த னென்பதனைச்
சால விளக்குதல்போற் றன்கையிற் —கோலதனைத்
தாங்கிப் புரந்தான் றமிழ்மன்னர் மற்றிருவ
ரேங்கிப் புறங்கொடுக்க வே. 44

கண்ணிற் சொலிச்செவியிற் காணு மிறைமாட்சி
பண்ணமையப் பெற்றுப் பரிவுடனே —தண்ணளியான்
மன்பதையை யோம்பி மகிழ்ந்துகுறை கேட்டொழித்தே
யன்பமைய வாண்டுவந்தா னல். 45

பொன்னணையின் மாட்டுப் புலவர்புடை சூழ்ந்திருப்பத்
தென்னனவ ரைப்பார்த்துச் செப்புவா —னன்னெறியீர்
முன்னைந் நாட்டு மொழியும் பிறர்நாட்டு
மென்ன மதிசயமே யென்று. 46

மன்னன் வினவுதலு மற்றவருங் கூறுவார்
தென்னர் குலத்தேறே செப்பக்கேள் —பன்னுபுகழ்
வையைக் கரையுள்ள வாதவூர் தன்னிலோ
ரையு ரமாத்தியருள் ளார் 47

அன்னார்க் ககவையோ வாறுடனே பத்தாகு
முன்னக் கலையனைத்து முற்றுணர்ந்தார் —மன்ன
வடிவின் மதன மதியிற் குருவாம்
படியி லிலையொப் பவர் 48

செப்பியவோர் நாமந் திருவாத வூரரா
மொப்பநீ பார்த்த லுவப்பாகுந் —தப்பில்லை
யென்றவருங் கூறி யிறைவன் விடைபெற்றுச்
சென்றனர்த மில்லிடமே சேர்ந்து 49

சான்றவர்கள் சொற்கேட்ட தார்த்தடந்தோண் மன்னவ
மான்றவரைக் காணு மவாவுடனே —யென்றசிலர் [னு
தம்மை விடுத்தவரைத் தன்னவைக்குக் கூட்டியின்னே
வம்மினென வாணை தந்தான் மன். 50.

வேதியர்பாற் றூதர் விளம்பக் கனியுடனே
போதலருந் தாரேந்திப் பூசுரரும் —வீதிகளி
லென்றும் விழவறு தேர்பெருகு மாமதுரை
சென்றடைய லுற்றார் சிறந்து. 51

ஆய ராச னவைக்களத்தை நண்ணிமன்னன்
செய்யவணை காட்டவதிற் சேர்ந்திருந்தார் —துய்யரது
மேனி யழகுதனை வேந்தன் வியந்துபெரு
மானிவரே யென்றான் மகிழ்ந்து. 52

செங்கதிரே போன்ற திருமேனியுந்நிறைந்த
திங்களே போன்ற திருமுகமும் —பொங்குமருள்
கொண்டதிருக் கண்ணுங் குலவுந் திருமார்புங்
கண்டரசன் கொண்டான் களி. 53

தோய்ந்த கலையில்யாருஞ் சொல்லும் வினாக்களுக்
கேய்ந்த விடையிறுத்தா ரென்பதனா —லாய்ந்தகலை
தேர்பிரம ராயரெனுஞ் சீர்ப்பட்ட மின்றிவர்க்கு
நார்பெருக நல்கினே னன். 54

என்றரசன் கூற விருந்த வமைச்சரெலா
நன்றதுவே யென்ன நயந்தனராற் —பொன்றுகிலும்
பொன்னுங் கலனும் பொதுள வளித்தரச
னுன்னுவான் மேலு முவந்து. 55.

மானிடரே யல்லரிவர் வானவரில் யாவரோ
மானிடமே கொண்டருளும் வள்ளலோ —யானிவரை
யின்று ரெனவறியே னென்னமைச்சர் தம்பியிவர்
முன்றுமென் றுனைவையின் முன். 56.

கற்றவமைச் சர்க்கிதனைக் காவலனன் போடுரைக்க
மற்றவரு மொப்பி மகிழ்ந்தரசைக் —கொற்றவா
வென்னதவஞ் செய்தா யிவரமைச்ச ராகவுற
வென்னமொழிந் தேத்தினு ரேற்று. 57.

கொண்டபத விக்குரிய குப்பாய முத்தரிய
மண்டிவருஞ் சேனை யணிசிவிகை —கொண்டலென
வார்க்குங் கருவிவகை யான வரிசையெலாஞ்
சேர்க்கும் படிசெய்தான் றேர்ந்து. 58.

வேதியரை யேற்றருளா வேண்டுமென வேண்டவவ
ராதியரு ளென்ன வவைகொண்டு —மாதுமையா
மீனாட்சி யம்மையுடன் மேவுசொக்கர் தாளேத்தி
மானாட்சி கொண்டார் மகிழ்ந்து. 59.

ஈன்ற முதுகுரவ ரிச்சொல்லைக் கேட்டுவந்தே
யூன்றுபுற மார்க்க மொழிப்பதற்கோ —ரேன்ற
கருவியா மென்னக் கருதிமகிழ் வுத்தார்
திருவருளை வாழ்த்தினார் சேர்ந்து. ௬௦.

மங்கலங்க ளெட்டு மருங்குவரப் பல்லியங்கண
மங்கு லெனக்கறங்க வாழ்த்திசைய —மங்கையர்கள்
பாடிவர மன்னன் பரிந்தளித்த வில்லடைந்தார்
நாடுமதி மந்திரியார் நன்று. 61.

பற்றிவரு வாரமைச்சர் பாதந் தொழுதுவிடை
பெற்றகமே சேர்ந்தார் பிறமதங்க —ளுற்றனபோற்
செங்கதிரோன் மேற்றிசையைச் சென்றடைய மீனினங்க
ளங்கெழுந்த வான மடைந்து. 62.

போதவழி தேராது புன்னெறியே சென்றுழுகும்
பாதகரி னெஞ்சம்போற் பாரெங்கு —மோதரிய
காரிருளே போர்ப்பக் கடவுளருள் கொண்டைய
ராரிரவைப் போக்கினா ரன்று. 63.

ஐயர் மறுநா ளமைச்சரிடம கொண்டாளுஞ்,
செய்ய திறங்காணச் சேர்வான்போன் —மையிருளைப்
போக்கிக் கதிரவனும் பொற்றேர்வந் தான்மறையோர்
வாக்குநீ ராற்பகையை மாய்த்து. 64.

காவலனைக் காணுதற்குக் காலைக் கடன்கழித்து
மேவுசிறப் போடேர்தி மேற்கொண்டு —கோவிலகம்
போந்தரசைக் கண்டவரும் பொன்னணையின் மீதிருந்து
வேந்த னுடனுய்வார் மேல். 65.

கன்னிவள நாட்டளவுங் காணுஞ் சனத்தொகையு
மன்னுந் திறையின் வருவாயு —மொன்னலர்க
ணல்கும் வருவாயு நாட்டிற் பொலியவெய்து
மூல்கின் வருவாயு மோர்ந்து. 66

அன்னமளிக்குஞ்சாலை யம்புனல்வாக் குஞ்சாலை
சொன்னமளிக் குஞ்சாலை தொண்டரின —மன்னுந்
திருமடங்கல் விக்கழகந் தேர்ந்துகணக் கிட்டா
ரருமடமை தீர்க்கு மவா 67

உள்ள வருவாயு மோதுஞ் செலவழிவு
முள்ளிமே லெஞ்சியதை யோர்ந்தறிந்தார் —விள்ளுவதே
விண்ணவர்கோ னுக்கு வியாழ னமைந்தனன்போ [ன்
லண்ணலர சற்கமைந்தா ரால் 68.

அங்கமொரு பத்து மமையக்கொண் டன்னவருந்
தொங்கிழிதேன் வேப்பந் தொடையாற்குப் —பங்கமற
விம்மைமறு மைப்பயனை யேல வுரைத்தவனைச்
செம்மையுற வைத்தார் தெரிந்து. 69.

புண்டரிகத் தாரும் புனலின் றுளிபோல
மண்டலமாள் பாரம் வகித்திருந்துங் —கொண்டவதிற்
பற்றணுவு மின்றிப் பரமன் கழனினைந்து
நற்றவரும் வாழ்ந்துவரு நாள். 70.

சித்தமுறும் பக்குவத்தாற் றேர்ந்தநா லாம்பதமாஞ்
சத்தியவர்க் குப்பதியத் தாவாத —முத்தியிலே
யாசை யதிகரித்த தாசானைத் தேடினார்
மாசை யகற்றியாள் வார். 71

என்றே குருநாத னென்னையாட் கொண்டருள்வா
னென்றே யெனதிருளை யெற்றுவா —னென்றேயான்
செய்யசிவா னந்தமெனுந் தேனிற் றிளைப்பனென
வையர் நினைந்துருகு வார். 72.

வெய்யவழல் விட்டு வெளியேறிப் போந்துநனி
யுய்ய நினைக்கு மொருவனைப்போ —லையருடற்
பந்தவினை நீங்கிப் பரமனடி கூடுநா
ளெந்தநா ளென்றிருந்தா ரெய்த்து. 73.

இன்னவவ ரெண்ணி யிருந்தொருநாள் வேப்பலர்தார்த்
தென்னன் றிருமுன்னர்ச் சேர்ந்தமையும் —பொன்னணை
மீதமர வாவுபரி மேய்க்குந் தொழிலொழி [யின்
ரீதறைய லுற்று ரெடுத்து. 74.

உற்றபரி மாவனைத்து மூனமிக வுற்றனவா
மற்றவையோ மூப்புநனி வாய்ந்தனவாங் —கொற்றவா
வொன்றேனுந் தக்கதிலை யுள்ளதிது வாமென்ன
வன்றேகி னாங் கறைந்து. 75

தென்னனிது கேட்டுத் திருவாதவூரரைப்பார்த்
தென்னசெயற் பாலதென வெண்ணாதே —மன்னவையார்
வில்லும் புலியுந்தம் மேன்மைக் கொடியுயர்த்தார்
சொல்லுவா ரிதைத் தொடுத்து. 76

முத்தும் வயிரமு முகந்தெறியு நீடலையா
தத்தும் பெருந்துறையிற் றம்பரிகள் —வாய்த்துளவா
மீனக் கொடியுயர்த்த வேந்தே யனைவிலைத்தார்
மானக் குலமன்னவர். 77.

மன்ன னதுகேட்டு வாதவூர்ப் பெம்மானைப்
பொன்னறையில் வேண்டும் பொருளெடுத்துப் —பன்னுங்
குணகடலைச் சார்ந்தங்குக் குற்றமிலாப் பாய்மாக்
கணநிறையக் கொள்ளென்றான் கண்டு. 78.

திருவாதவூரர் செழியன்சொல் வண்ண
மொருவாத பண்டாரத் தாற்றுப் —பொருளாதி
வேண்டுவன வொட்டகத்தின் மேன்மிகப்ப வேற்றியே
யாண்டுமுன ரேக வமைந்து. 79

மத்தகயந் தாங்கியவி மானத் துறையிறையைப்
பத்தியுட னேத்திப் பரவியே —சுத்தரவர்
சென்ற பொழுதோர் சிவத்துவிசர் நேர்ந்துவினை
வென்றதிரு நீறளித்தார் வேட்டு. 80.

நல்ல நிமித்தமென நாடிப் பணிந்தேறற்றூர்
செல்ல விடைபெறுவான் றென்னவன்பால் —வல்லவரும்
போயணுகக் கண்ட புரவலனுஞ் சென்றுவர
நேயமுட னுய்த்தா னினைந்து. 81.

ஓசையுறும் பாற்கடலி லோர்மதியம் வந்ததுபோற்
றேசொளிரு முத்துச் சிவிகைமிசைப் —பூசுதிரு
நீற்றுப் பொலிவோடு நின்றிலகி னூர்பதியைப்
போற்றிப் புகழுவார் போந்து 82

தேருங் கரியுஞ் சிறந்தபரி மாவும்போர்
வீரர் பலரு மிடைந்துவரப் —பேரிவகை
வாரியொலி போற்கறங்க மாமதுரை விட்டகன்றார்
சீரியோர் பின்பற்றச் சென்று. 83.

மூலமுத லாமிலங்கண் முற்றுங் கடந்தடிகள்
சொல்லும் பெருந்துறையைச் சூழ்ந்துள்ள —வெல்லையுற
வண்ணறரும் பொன்கொள்ள வங்கையர னேந்தல்போல்
வண்ணமொடு பூத்தபது மம். 84

எல்லைதனைச் சென்றடைய வின்பச் சுவையொன்று
வல்லையவர்க் கூற மனமுருகி — வல்லசுவை
நீங்கவொரு வன்கனிக்கு நேர்மைதனைப் போலவரு
மோங்கமகிம் வர்ரா ரவந்கு. 85.

அந்தவிடஞ் சேருதலு மைம்புலனு நெஞ்சகமு
நந்தலிலா வானந்த நண்ணவே —யிந்தவிடத்
தென்னையாட் கொள்ள வியைவர் குரவரென
வுன்னினா ருள்ள முவந்து. 86

தேர்ந்துடனே யன்னார் சிவிகைதனை விட்டிறங்கிச்
சார்ந்தவரை யோர்பாற் றனியிருத்தி —நேர்ந்துடனே
யம்புனலிற் றோய்ந்தன்பா யான்மநா தர்ப்பணிய
வெம்பெருமான் சென்றா ரிசைந்து. 87.

ஆங்கார் வெயிலுவந்த வைங்கரனை யேத்தியரு
டாங்கான்ம நாதரிரு தாளேத்தி —நீங்காத
பேறுதவ வேண்டுமெனப் பெம்மானைப் போற்றுங்கா
னீறுதவி னாரொருவர் நின்று. 88

செங்கையினீ றேற்றுச் சிரநெற்றி சேர்த்தங்குத்
தங்குயோ காம்பிகையின் றாளிறைஞ்சித் —துங்கமுறு
மந்தணர்கள் சூழ வமைச்சர் தமதிருக்கை
வந்தடைய லுற்றார் மகிழ்ந்து. 89.

போந்தமறை யாளர்க்குப் பொன்னுடை யாதியவ
ரீந்தவரைப் போக்கிடலு மேழ்பரித்தே —ரூர்ந்தவனு
மீனவனுக் கோத விரைவான்போன் மேற்றிசையைத்
தானடைய லுற்றான் றணிந்து. 90·

எண்ணுமறு காட்கானு மீசன் றிருவுருவ
வண்ணமிது வென்ன வருத்தல்போல் —விண்ணிடத்துச்
செக்கர் வடிவஞ் செறிந்ததுபின் காரிருளும்
புக்க திருநிலத்தைப் போர்த்து. 91

அற்றை யிரவி லமைச்சர் துயில்வேலைப்
பற்றுமா ணாக்கரொடு பண்பாக —வுற்ற
குருவடிவந் தாங்கிக் குருந்தடியி லீசன்
மருவுகணைக் கண்டார் மகிழ்ந்து. 92.

ஈதோர் கனவோயா னெண்ணியவெண் ணந்தானோ
யாதோ வறியே னெனவிரங்கி —மாதோர்கூ
றுற்றவரே வந்தாரீ துண்மையெனை யாள்வரென
நற்றவரு மெண்ணினார் நன்று. 93.

என்றவரு மேங்கி யிருந்துழியோ ராசானை
யின்றுநீ கொள்ளுவா யென்றியம்ப —வன்றடைவான்
போலக் கதிரவனும் போந்தான் குணதிசையி
னீலக் கடனடுவி னின்று. 94.

ஐயர் துயிலெழுந்தே யாற்றுங் கடன்முடித்துப்
பையரவப் பூணானைப் பார்ப்பதற்கு —வெய்யவழ
லெய்துமெழு காநெஞ் சிளகக்கண் ணீர்மணிகண்
மெய்திகழச் சென்றார் விரைந்து. 95.

ஐயர் வருமுன்ன ரான்மநா தப்பெருமான்
செய்ய கதிர்கோடி சேர்ந்ததுபோன் —மெய்யொளிர
மூவுலகி லாரழகு முற்றுறவோர் வேதியராத்
தாவில் குருந்தடைந்தார் சார்ந்து. 96.

மாசிலாத் தூசுடுத்து மாமணியின் றாழ்வடமுந்
தேசொளிரு நீறுஞ் சிறந்தணிந்து —பாசமறுத்
தாளவோர் தேசிகரா யாண்டமைந்தார் சீடரொடு
நீளரவப் பூணார் நினைந்து 97.

ஓதுஞ் சுரத்துடனே யோங்குமறை யோதுநரும்
போதமாம் வண்ணம் பொருளையாய்ந் —தோதுநருங்
கன்மமொடு ஞானத்தின் காண்டங் கூறுநரும்
பன்மா ணவருற்றார் பாங்கு. 98

வேதச் சிகையை விரிக்குநரு மாகமத்தின்
மேதகுசீர் தன்னை விளங்குநரும் —போதமுறு
மார்க்கங்க டம்மை மறுக்குநருஞ் சைவமே
யாக்கமுள தென்பாரு மாங்கு. 99.

முப்பொருளி னுண்மை மொழிகுநருஞ் சித்தாந்த
மொப்பதெது வென்ன வுரைக்குநருந் —தப்பிற்
சரியைமுத னான்கு தனிவழியைச் சாற்று
மரியவரு முற்றா ரடைந்து. 100.

இத்தகைய சீடர்பல ரெம்மருங்கு மீனினம்போற்
பத்தியுடன் சூழப் பனிமதிபோ —லத்தனே
ராசிரிய னாகி யமைந்தருள் வேதியரு
நேசமுட னங்கடைந்தார் நேர். 101

கண்டிடினு மெல்லையில்யான் கண்டதொரு காட்சியைநேர்
கண்டனனிங் கென்னக் கனிந்துருகி —பண்டில்லார்
பெற்றாரிப் பேறடியேன் பெற்றே னெனவடைந்தார்
கற்றாவைப் போலக் கசிந்து. 102.

அண்ணலாங் காந்த மடியேன் மனவிரும்பைப்
பண்ணமையப் பற்றியவோர் பான்மையா —லெண்ணிய
சீருற்ற காலமிவண் சேர்ந்த தெனப்பணிந்தார் [நற்
வேரற்ற வோர்மரம்போல் வீழ்ந்து. 103.

வீழ்ந்தபடி யுற்றார் விமல ரெழுகென்ன
வாழ்ந்தபடி நின்றே யவ ருருகச் —சூழ்ந்தடியார்
நேயமுறு வாரிவரை நேர்ந்தாட் கொள் ளன்முறையாம்
நாயனே யென்றார் நயந்து. 104.

நாளையும்யாம் வேண்டே நயக்கும் பலனமைந்த
வேளையும்யாம் வேண்டேம் விருப்புடனெந் —தாளிணையை
யேத்துமிவற் கிற்றை யிரவிலருள் வேமென்று
ரார்த்தநறுங் கொன்றைமுடி யார். 105.

கேட்டடியா ரெல்லாங் கிளர்ந்தபெருங் காதன்மே
லீட்டிணல் வாதவூ ரெம்மிறைவர் —கேட்டருள்வார்
தேருமுப தேசமெனத் தேனூர் குருந்தடியைச்
சீரணிசெய் நாக்கினூர் சேர்ந்து. 106.

வேதிபலிங் காலமைத்து மேற்பொன் றகடிட்டுச்
சோதிமணிக் கானிறுவித் தொங்கார —மாதியவை
தூக்கியணி பட்டாற் றலங்கவிதா னங்கொடியு
மாக்கியணி செய்தா ரமைத்து. 107.

நீலக் கடலதனை நீங்கியே தானுமொரு
சீலக் குரவனிடஞ் சென்றடைந்து —சாலவுப
தேசம் பெறப்போவான் செய்கைபோற் செங்கதிரோன்
பேசுங் குடக்கடைந்தான் பின். 108.

வாதமிடும் புத்தரது வாயொடுங்கு மோர்விதத்தை
யோதுதல்போற் கஞ்ச மொடுங்கினவே —நாதனூர்
செய்யதிரு வாய்மலருஞ் செய்கைபோ லாம்பலெல்லாம்
பொய்கையிடைத் தோன்றினவாற் பூத்து. 109

ஐயர் மனத்திலினி யாரப் பெறேமெனவே
பையவதை விட்டகன்று பாரெங்கு —மையிருளும்
புக்குப் பரவியது புண்ணியர்தா மாங்குமன
நெக்குருக நின்றார் நினைந்து. 110

சந்தியா காலமுதற் சாரத்த யாமம்வரைப்
பந்தியா நின்று பணிசெய்தார் —முந்தியே
சாமமொரு மூன்றுகச் சார்ந்ததுநா லாம்யாமந்
தாமருவல் போலத் தொடர்ந்து. 111

மேன்மையுறு மப்பளிங்கு வேதிமிசைத் தென்முகமா
யான்மநா தப்பெருமா னுசானைத் —தான்மருவி
யெப்புவியும் போற்று மெழில்வாத வூரர்தமை
யொப்பவெதிர் வைத்தா னுவந்து. 112

கண்ணருளா னேக்கிச்செங் காந்தட் கரமலரை
வண்ணமுறச் சென்னியிலே வைத்தமைத்துப்—புண்ணிய
மாயைமுத லாமலங்கள் வந்து விரவாது [ரை
போயொழியச் செய்தான் புரிந்து. 113

தூயகலை யான்மூடிச் சூக்குமபஞ் சாக்கரத்தைத்
தூயர் திருச்செவியிற் சொற்றருளி —யாய
வுடலும் பொருளு முயிருமுடன் கொண்டான்
மடமை யொழித்தெனையாள் வான். 114.

போதவினித் தாண்மலரிற் பூசைபுரி யென்றுசா
தீனுதனி னி தொப்பி யுடனடியாம் —போதுதனை
மஞ்சனம் ராட்டி மலரிட் டுபசரித்துத்
தஞ்சிரசிற் கொண்டார் தவர். 115

வாதவூர் வள்ளன் மனவிருள்போற் பாருலகின்
மீதடரு மையிருளும் வீந்ததே —காதலுட
னையரடி மைத்திறத்தை யாயவரு வானைப்போல்
வெய்யவனும் வந்தான் விரைந்து. 116.

போற்றுஞ் சிவஞான போதமெனும் புத்தகத்தை
யேற்றிடுவா யென்றடிகட் கீந்ததனுட் —டோற்றலுறும்
போதப் பொருளைப் புகன்றருளி னுருலகி
னோதப் பொருளானார் நன்று. 117.

சொன்ன பொருளைத் தொடரச் செவிக்கொண்டு
மன்னுங் குருந்தடியில் வாழ்வார்க்குப் —பன்னரிய
வண்டமிழின் மாலை மணக்கத் தொடுத்தணிந்தார்
பண்டமிழ்தே யென்னும் படி. 118.

தேனோ கனிரசமோ தித்திக்குங் கற்கண்டோ
வானோ ரமுதமோ மற்றெதுவுந் —தானோது
மொப்பிலையாம் வண்ண முரைத்தவற்றைக் கேட்டீசன்
செப்புவா னீதுஞ் சிறந்து. 119.

வருத்திடுமின் வாசகங்கள் மாணிக்கந் தன்னை
நிகர்த்ததொரு மேன்மையா னின்னைச் —சகத்தவரு
மாணிக்க வாசகனாய் வாழ்த்துவா ரென்றானீர்
வேணித் கடவுள் வியந்து. 120

மாணிக்க வாசகரிவ் வாசகத்தைக் கேட்டுமன
நாணிக் கரைந்து நவிலுவார் —பேணியொரு
நாயினுக்குப் பொற்றவிசை நல்குதல்போ லாகுமிந்தப்
பேயினுக்கிப் பேறென்றார் பின். 121

என்னையாட் கொள்ளிறைவ யான்கொணர்ந்த விச்செல்வ
நின்னுடைய கோயிற்கு நேர்மையொடுன்-பொன்னடியை
நம்புமடி யார்க்கு நயந்தருளா யென்றிறைஞ்ச
வெம்பெருமா னேற்று னிசைந்து. 122.

ஈசன் றிருவுள்ள மேற்றருளத் தேர்ந்துமணி
வாசகருஞ் சிற்பத்தில் வல்லார்க்கு —நேசமொடு
தாண்டும் புரவிகொளத் தாங்கொணர்ந்த காசையெலாம்
வேண்டும் படியிறைத்தார் மேல். 123.

விண்ணுளவக் கானிறுவி மேலே கொடுங்கைபல
பண்ணமைய வைத்துப் பதுமைவகை —வண்ணமுற
வுத்திரங்க ளிட்டே யுரனமைபல் பாவுகளும்
பத்தியுற வைத்தமைத்தார் பார்த்து. 124.

இம்முறையே யீச னிருப்பிடமு மென்னையா
ளம்மையோ காம்பிகையி னாலயமுஞ் —செம்மையுற
மண்டபமுங் கோயின் மதிலும் விமானமொடு
விண்டடவு கோபுரமு மேல். 125.

பூசுரரின் வீடும் புனிதமுறுஞ் சைவஞ்சேர்
தேசிகரின் செய்ய திருமடமும் —வாசமுறு
நந்தவன முங்குளமு நாடிப் பலசமைத்தார்
சுந்தரமிக் கோங்கத் தொடர்ந்து. 126.

ஈச னடிகடமை யீண்டுறைதி யென்றருளிக்
காசி னுருவங் கரந்தருளத் —தேசிகரைப்
பாரா தடிகள் பதறி யழுதிரங்கிச்
சோராநின் றெய்த்தார் துடித்து. 127.

கண்டவைக ளெல்லாங் கனவோ நனவுகொலோ
யண்டியெனை யாட்கொண்ட வாசானைக் —கொண்டுய்ய
வெண்ணரியுள நாயே னினியுமா றேதென்னப்
புண்ணியரு நொந்தார் புலர்ந்து. 128.

கண்ணிலான் கையிற் கதிர்மணிபொன் றீந்ததுபோற்
பண்ணமையுந் திருக்கலப் பாமணியிடம் —வண்ணமுறும்
வள்ளமதை யீதல்போல் வந்தென்னை யாண்டபெரும்
வள்ளலை யெங்கொளித்தாய் மற்று. 129.

மன்னூ பெருந்துறையில் வாழு மருமருந்தே
பொன்னார் திருமேனிப் புண்ணியனை —யென்னுவி
தங்குமோ நின்னைவிட்டுத் தாமே னொவருந்தி
யெங்குமோ டித்திரிந்தா ரெய்த்து 130.

போவார் வருவார் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குவார் —தேவாநீ
யென்னைத் தனியிருத்தி யெங்கொளித்தா யென்னரசே
யென்னத் தயங்கினா ரெய்த்து. 131.

மன்னர் பொருள்விடமா மற்றிவரோ வோர்ந்திலரே
யென்னசெயற் பாலதென வேங்கினா —ரந்நகரிற்
பாயும் பரிகொளப்பின் பற்றியவ ரிச்செயலை
யாயும் பரிசினரா யாங்கு. 132.

கொத்தலர்தா ரான்பொருளைக் கொண்டே செலவிட்டார்
சித்தமிவர்க் கென்ன சிதைந்ததோ —சத்திகங்கள்
கொள்ளவழி யாது குடைவேந்தன் கேட்கினிவர்
விள்ளுவதெ னென்றார் வியந்து 133.

கோயிலகம் விட்டடிகள் கோபுரவா யிற்குறுகித்
தாயபரி யாளர் தமைக்கண்டார் —போயவரைத்
தென்னவர்கோன் பாலாடித் திங்கண் முடியின்மா
மன்னுமென வோதுமென்றார் மற்று. 134.

அன்னார் விரைந்தரசற் கான விவரமெலாஞ்
சொன்னா ரவனுந் துரங்கங்க —ளெந்நாளில்
வந்தடையு மென்ன மகிழ்ந்தே யெதிர்பார்த்தான்
முந்தவே லாய முடித்து. 135.

வாதவூர் வள்ளல் வகுத்தகா லங்கழிய
வோதும் பரிகளோ வற்றிலவாற் —றதுகுகார்க்
கொற்றவனவ் வேதியரைக் கூட்டிவரத் தூதர்க்குச்
சொற்றனன்ற னுள்ளங் கடுத்து. 136.

தூதர் விரைந்தகந்தத் தூயரிடம் போயடைந்து
தாதலரும் பூந்தாரான் றந்தசெனை —வோதிச்
கருளைப் பணிந்திருந்தார் தொண்டரேற் றீச
னருளைப் பெறற்கென்றா ராங்கு. 137

தென்னன் சினங்கொண்டான் செய்யும் வகைதேரே
னென்னமணி வாசகரு மெங்ஙனே —யன்னவைக
ளொல்லைவரு மென்றெழுத வோர்வாக் கெழுந்தொலித்த
தெல்லையறும் வானகத்தி லே. 38.

வள்ளலிது தேர்ந்து வழுதிக்கோ ரோலைவிடுக்
துள்ளமிக வேங்கி யுறங்குங்கால் —வுள்ளும்.
பரியுடனே யாமடைவம் பார்த்திபன்பாற் போய்நீ
தெரிவியென வெம்பெருமான் சென்று. 139.

கனவி லுரைத்தருளக் கண்விழித்துத் தொண்டர்
மனமுவந்தே மாமதுரை மன்னன் —முனமடைந்தார்
வேந்த னுபசரித்து வேகமுறும் வாசியெலாம்
போந்தனவோ வென்றான் புகழ்ந்து. 140.

பாண்டியர்தம் மேறே பரியனைத்து நாண்மூன்றி
லீண்டுவவென் றோதி யெமதடிக —ணீண்டமுடி
மானத் துறைசொக்கர் மாமலர்த்தா ளேத்தித்தந்
தானத் துறைந்தார் தனித்து. 141.

செப்புநாண் மூன்றாயுஞ் சேர்ந்திலவே வாசியென
வெப்பமிகக் கொண்டரசன் வேதியரைக் —கைப்பிடியாக்
கட்டியொறுத் தென்பொருளைக் காணவே வாங்குமெனக்
கட்டளையிட் டானெஞ்சங் காய்ந்து. 142.

சாற்று மொழிகேட்ட தண்டவினை யாளர்மிகச்
சீற்றமொடு வேதியரைச் சீறியே —மாற்றமுமே
னென்னவழி பொன்னுக்கே யென்று முதுகொடியத்
துன்னியகல் லேற்றினார் சூழ்ந்து. 143.

ஐயர் பொறைதாங்கி யாலவா யண்ணலிந்
செய்யதா ளேத்தித் திகழ்ந்தனரான் —மையணியுங்
கண்டனன்பர் துன்பக் கனம்பொறுப்பா னாதலினாற்
கொண்டனனப் பாரங் குறித்து, 144.

ஏற்றுஞ் சிலைப்பார மெள்ளளவுந் தோற்றாதே
யேற்றின் கொடியாரை யெர்மடிகள் —போற்றியுறச்
காவலுறு மள்ளரிகைக் கண்டடிக டாளிணைக
ளேவிலங் கிட்டார் நுழைத்து. 145.

வாதவூர் வள்ளன் மனநோவக் கூற்றனைய
பாதகர்கள் செய்வினையைப் பார்க்கவஞ்சி —யாதவனும்
போவானைப் போலப் புணரியிடைப் போய்மறைந்தான்
மாவாரு மின்மூடி வைத்து. 146.

அற்றையிர வெல்லா மடிகள் சிறைப்பட்டும்
பற்றியதம் முள்ளப் பரிவோடுங் —கற்றைவார்
வேணிப் பெருமானை வேண்டி மலர்த்தாளைப்
பேணிப் பிறங்கினார் பின். 147.

அன்றுவரும் வாசிகளுக் கானவொரு மாதிரியா
மென்றுசொல வேழ்பரியை யேறிரதத் —தொன்றவே
பூட்டிக் கதிரவனும் போந்தான் குணதிசையி
னீட்டிக் கதிர்வீச நேர். 148.

ஐயர் சிறையிருந்தெம மாலவா யண்ணலிரு
செய்யமலர்த் தாளைத் தியானிப்பார் —துய்யனே
முந்தாவி யாதியவை முற்று முவந்தேற்ற
வெந்தா யிரங்கா யினி. 149.

மூவா முதலே முதுமறையி னந்தமாந்
தாவாத ஞானத் தனிவிளக்கே —தேவாவான்
றேசாரு மாடத்திருவால வாயுறையு
மீசா விரங்கா யினி. 150.

நாயனையே னைப்பொருளா நாடிப் பெருந்துறையி
லாய குருந்தடியி லாண்டருளுந் —தூயா
சிறையிலுழல் வேனோ திருவால வாயா
ரிறையே யிரங்கா யினி. 151

பாண்டியர்கோன் பொன்னைப் பரிந்துனக்கே யாக்கினே
னீண்டவனுங் கேட்கின்யா னென்செய்வேன் —வேண்டு
சிந்தையுவந் தீயுந் திருவால வாயுறையு வன
மெந்தை யிரங்கா யினி. 152.

இந்தவித நின்றடிக ளேங்கி யழுதாற்ற
விந்துமுடி யார்செவியி லீர்ங்குதலை —மைந்தரொலி
தாயின் செவிப்புகல்போற் சாரச் சிறைநீக்கத்
தூய வுளங்கொண்டார் சூழ்ந்து. 153.

நந்திமுத லாதிரளை நாதர் நமையழைத்து
முந்தநீர் போய்ப்புனத்தின் மொய்ந்நரியைச் —சுந்தரமார்
நல்லபரி யாக்கி நடத்துந் தலைவராச்
செல்லுமெனச் செப்பினர் தேர்ந்து. 154.

ஆணைப் படியவரு மான நரியெலா
மாணப் பரியாக்கி வானவரு —நாணவே
வேகமார் வாசிகளின் மீதிவர்ந்தே யோட்டிவரும்
பாகரா வந்தார் பரிந்து. 155.

வந்தவருட் சொக்கரொரு வைதிகமா மீதிவர்ந்து
முந்துறந டாத்தி முடுகினார் —சிந்துமிகப்
பொங்கி யெழுவதே போலப் புரவியெலா
மங்கெழுதல் கண்டா ரடைந்து. 156.

தூளி திசையனைத்துந் தூர்த்துக் கதிரொளியை
மாள மறைக்கவிருள் வந்ததா —லாளியெனும்
வீரர்கை வாள்வெயிலை வீசப் பகலுறலா
லாரிரவு நாளுமிகை யாம். 157.

கண்ட கடிநகரார் காவற் சிறையதனைக்
கொண்ட வமைச்சரிடங் கூறினார் —தொண்டரவர்
தேனிழியும் வேப்பலர்தார்த் தென்னற்குச் செப்புமெனை
மீனனிடஞ் சென்றார் விரைந்து. 158.

மன்னர் குலமணியே வந்த புரவியெலா
மென்ன மகிழ்ந்தவனு மேகினீர் —முன்னுமதி
மந்திரியார் தம்மை வணங்கி யழைமினென
வந்தவரும் வேண்டினார் மற்று. 159.

வேண்டமதி மந்திரியார் வேந்த னவைக்களத்தை
யீண்டியவற் கேற்ப வியற்றினார் —நீண்டவொளிப்
பைம்பொற் றுகிலும் பதக்கமுங்கோ மானளித்தா
னெம்பெருமா னேற்றா ரிசைந்து. 160.

ஆவணிமா மூலநா ளன்று பகர்ந்தபடி
மாவணியா வந்தடுக்க மாமதுரை —சேவணியா
விண்ணகமெல் லாந்தூசி மேவியதால் விண்ணகமு
மண்ணகமா யிற்று மறந்து. 161.

காற்றனைய வேகமுள காலத்தீ போல்விழிய
கூற்றனைய வெங்கொடுமை கொண்டுள்ள —சாற்று
மிடிபோன் முழக்குடைய வெண்ணிலாப் பாய்மா
படிபோற்ற வந்தடைந்த பாய்ந்து. 162.

உள்ளும் புறமு முரைக்குங் கடைத்தெருவும்
விள்ளுமறை யாதியவர் வீதிகளுந் —துள்ளுபரி
யீட்டமே யாக விருக்க விடமின்றி
வாட்டமே யுற்றார் மருண்டு. 163.

கண்டோர் வியந்தவற்றைக் காணக்கண் ணாயிரமுங்
கொண்டோ மிலையென்பார் கொற்றவனு —முண்டோகே
ரென்னமகிழ் பூத்தே யிருந்தமதி வல்லாரை
யின்ன வியக்குவர்யா ரென்று. 164

வினவ வடிகள் விளம்பறியேன் யானு
மெனலு மிறைவனவ ணெய்திக் —கனிவுடனே
வீரர் தமைவினவ வேந்தப் பரியுகைக்குஞ்
சீரியரைச் சுட்டினார் தேர்ந்து. 165.

கண்டவுட னன்னான் கருத்துணரா தேகரமா
மூண்டகங்கள் சென்னி முகிழ்த்தேற —வண்டுளரும்
வேப்பலர்தா ரானுணர்ந்து வெள்கி யதிசயித்துக்
கூப்பியகை யோடமைந்தான் கூர்ந்து. 166.

எழுதரிய வாசிமிசை யேறிவரும் வீரர்
வழுதிகுலத் தேறே மருவும் —பழுதில்லா
விப்பரிக ளெல்லா மெழில்வாத வூரர்தரு
மப்பொருளால் வாங்கிவந்த வாம். 167

என்னப் பணிக்க விறைவன் மகிழ்ந்திவைக
ளன்னுங் குணங்களைநீர் சொல்லுமெனப் —பன்னு
மறைகளொரு நான்கும் வகுத்ததிரு வாக்கா
லிறைவரிது சொல்வா ரிசைந்து. 168.

வந்த பரியை வகைவகையாய்த் தேசமியன்
முந்துங் கதியு மொழிந்ததற்பி —னிந்தவகை
வெற்றி தருமிரவின் மேவு மிவைபகலிற்
கொற்றவனே யென்றார் குறித்து. 169.

இன்னவைகள் சேர்க்கு மிருபோது வெற்றியைமற்
றன்னவைகள் மிக்க வருமையா —மென்னவே
வந்தபரி மாவின் வகைநிறங்கு ணங்களிவை
யந்தமுறச் சொன்னு ரவற்கு. 170

அச்சம் புவனத் தடங்கா தடுக்கவரு
மெச்சமொன்று மில்லா விருளிகளா —நிச்சலுமே
யேறுபுக ழோயின்றைத் தென்றெறிபு மிவ்வெண்மை
தேறுவாய் நாளுந் தினம். 171

நம்மா லிவர்ந்து நடாத்த நடந்துவரு
மிம்மா நிலத்தி லெழுகலரி —நம்மா
மறைவா யிருக்கவே வைத்தான் பிரம
னிறைநீயெய் தத்தக்க தில். 172

உடலரிய மன்னவா முன்பாற் செலுத்து
மிகலன் பரிதா மியல்பிற் —பகரில்
வரவரக் கண்டறிவாய் வாரீ நீ யென்று
ரரவுநீர் வேணிமறைந் தார். 173

பன்னரிய நாமிவைகள் பார்த்திபனே பொய்யுரையே
மென்ன வரசற் கியம்புதலு —மன்னவனுந்
தாயபரி வல்லார் தமைக்கொண்டு வாம்பரியி
னைய பரிசறிந்தா னங்கு. 174.

இன்றைக்கே வாசிகளை யேற்றுக்கொ ணுளைக்கோ
வொன்றுக்குட் பாங்க ளுடன்படே —மென்றநுர்
வாரார் கயிறுடனே மாறிப் பரியளித்தார்
தாரார் வழுதிக்குத் தான். 175.

ஏற்ற பரியை யிலாயத்திற் கொண்டுய்க்க
வாற்றுந் தொழிலாளர்க் கவ்வழுதி —சாற்றியே
மாசில்லா வைதிகமா வந்தார்க்கு முத்தாரந்
தூசெல்லா நல்கினன் சூழ்ந்து. 176.

தந்தவற்றை யேற்றுச் சலாமென் றவற்குரைத்து
வந்தகண மோடு மறைந்தருளப் —பைந்தமிழில்
வாசகஞ்சொ னல்லோரை மன்ற வுபசரித்து
வாசவனைப் போலமைந்தான் மன். 177.

மேதினியில் வந்தி விரும்பியிடும் பிட்டிற்கோ
வாதவூர் வள்ளல் மகிமைக்கோ —யாதுக்கோ
வுய்த்த குதிரையெலா மோரியா மாறரனார்
சித்தத் திடைக்கொண்டார் தேர்ந்து. 178.

கொள்ளக் கிடையாக் குதிரைநமக் குற்றதென
வள்ளற் கருமகிழ்ச்சி மேவியே —துள்ளுபரி
கட்டியவச் சாலைகளைக் காவல் புரிந்துவந்தார்
மட்டிலாப் பாகர் மகிழ்ந்து. 179.

அற்றையிர விற்கடிகை யாறிரண் டாமளவி
லுற்றபரி மாவனைத்து மோரியுருப் —பெற்றெழுந்து
திக்கெலாஞ் சென்றடர்ந்து சேர்ந்து நகரெங்கு
மிக்கொலிசெய் தோடினவான் மேல். 180

பரிக ணரிகளாய்ப் பாய்ந்து நகரில்
விரியு மிடமெல்லா மிக்குக் —கரியுடனே
முன்னமையும் வாசிகளை முற்றுங் கடித்தவற்றைச்
சின்னபின்ன மாக்கினவே சென்று. 181.

கண்ட கடிநகரார் காவலன்பாற் சென்றடைந்து
மண்டெரி செய்த வரலாற்றை -விண்டிடவு ல்
முந்துபெரு வெள்ளம்வந் துற்றவெள்ளங் கொள்வதுபோ
வந்ததே யென்றழுன்றன் மன். 182.

மந்திரியா வந்தவன்செய் வஞ்சமீ தென்றரசன்
சிந்தையினிற் றேர்ந்துகடுஞ் சீற்றமொடு -முந்தநீர்
கள்ளமிகு வானைக் கடுஞ்சிறையிட் டெம்பொருளைக்
கொள்ளுமென்று னுள்ளங் கொதித்து. 183.

மன்னனுரைத் தாங்கு மதியமைச்ச ரைச்சிறையின்
மன்னவவர் செய்து வருத்தவே -யன்னவருஞ்
சித்தங் கரைந்து திருவால வாயுறையு
மத்தன் கழனினைந்தா ராங்கு. 184

பட்டவெலாம் போதாவோ பாவியே னின்னுமருங்
கட்டமுற நின்றன் கருத்தேயோ -விட்டசித்தி
யெல்லா மளித்தருளு மீசா வெளியேன்றன்
பொல்லா விடர்தவிர்ப்பாய் போந்து. 185.

என்றடிக ளேங்கி யிருகணீர் வார்த்தழுங்
கன்றொலியைக் கேட்ட கபிலைபோற் -கொன்றைமுடி
யண்ணலருள் செய்யவையை யாற்றிற் பெருவெள்ள
நண்ணவுளங் கொண்டார் நயந்து. 186.

பாதாள கங்கையது பாரை யகழ்ந்தெழுந்து
மீதாரல் போல்வையை மேலெழுந்து -மோதாகின்
றுற்ற கரையை யுடைத்தோடி மாமதுரை
முற்றப் பரந்ததே மொய்த்து. 187

வையைக் கரைசேர் வயல்வெள்ளங் காவெள்ளஞ்
செய்யாக ருள்ள தெருவெள்ளந் —துய்யநெடுங்
கூடமெலாம் வெள்ளமிறை கோயிலகம் வெள்ளம்வாழ்
வீடுகளெல் லாம்வெள்ள மேல். 188

மாத ரரங்கமொடு மாளிகையெல் லாம்வெள்ள
மோது மிடமெங்கு மோதமே —மோதுதலுந்
தங்குங் குடியெல்லாந் தம்முடைமை யைக்காக்க
விங்குமங்கு மோடினரெய்த்து. 189

மூப்பமையும் பெற்றோரை முன்கொடுபோ ஞர்சிலரே
காப்பமையு மக்கடமைக் கைக்கொண்டு —கோப்புறவே
போனார் சிலரே பொருளாதி கைக்கொண்டு
காணடி னார்சிலரே கண்டு. 190

பாதங் கணைக்கால் பருத்தமுழந் தாண்மேலுஞ்
சீதப் புனல்பெருகிச் சென்றேற —வாதரவே
யற்றுக் குடிக ளலமரலா னார் தமக்குப்
பற்றுக்கோ டின்றிப் பயந்து. 191

நீரின் பெருக்கினா னின்றமனைக் கட்டிடங்கள்.
பாரில் விழவே பதைபதைத்துச் —சேருமிட
மின்றி யுயர்ந்தவிட மேறவது வீழுமெனக்
கன்றினா ருள்ளகுடி கள். 192

வாதவூர் வள்ளறனை வன்சிறையிற் காத்தவர்கள்
சீதப் புனல்பெருகச் சென்றார்தம் —மாதரிள
மக்கடமைக் காக்கவே வாதையின்றி நம்மடிக
ளைக்கனடி வாழ்த்தியுற்றார் நன்று. 1.8.

பார்த்த குடிகளெலாம் பார்த்திபன்பாற் சென்றேகச்
சீர்த்தமதி வல்லார்க்குச் செப்புவா —ஞர்த்தபெரும்
வெள்ளந் தனைத்தடுக்க வீட்டிற்கோர் பாகமாக்
கொள்ளச் சமையுமென்றான் கூர்ந்து. 194

புத்தியென வன்னார் புகன்று குடியொன்றாக்
கித்துணைய நீளமா மென்றளந்து —வைத்தனரா்
கூடையுமண் வெட்டியுந்தோட் கொண்டு குடிகளெலா
மோடுநதி யுற்றா ரொருங்கு. 195

வெட்டியுறு வார்சிலரே வெட்டியமண் ணைக்கொண்டு
கொட்டியுறு வார்சிலரே கூடைகளி —லொட்டியுறு
மண்ணைவழிப் பார்சிலரே வந்துபணி செய்வாரி
னெண்ணைவகுப் பாருண்டோ வீங்கு. 196

எல்லாரு மிவ்வா றிருந்துகரை போடவது
வில்லாது வீழ்ந்ததந்த நீர்ப்பெருக்காற் —சொல்லாரு
மவ்வணையி லோர்கோ லடைபடா தேயமைய
மவ்வழியே நீர்போந்த தாங்கு. 197.

முன்னியவப் பாகமோர் மூதாட்டிக் குற்றதா
மன்னவளோ திங்களோ ராயிரமு —மன்னியவள்
மக்களவட் கில்லை மனமுவந்தே யட்டபிட்டைச்
சொக்கர்தமக் கிட்டுவிற்பாள் சூழ்ந்து. 198.

வெள்ளைமே கம்போல் வெளுத்ததிருக் கூந்தலாள்
கிள்ளத் தசையுடலிற் கிட்டாதாள் —கொள்ளுந்
தடியுடனே தாண்மூன்று தாங்கினளாடு
முடியுடையாள் மூப்பான் முதிர்ந்து. 199.

மற்றவடன் ளுமமோ வந்தியா மம்மாதோ
வுற்றதொரு பாகத்திற் கோராளும் —பெற்றிலளான்
மன்னன் சினங்கொள்வான் மற்றிதனுக் கென்செய்வே
னென்ன வருந்தினா ளெய்த்து. 200

வீதியெலாந் தேடியுமோர் வேலையா ளுங்காணா
தாதியே தஞ்சமென வாங்கமைய —மாதையிடம்
வைத்தருளு மெம்மிறைவர் மாதுக் கருள்செய்யர்
சித்தமிடைக் கொண்டார் தெரிந்து. 201

வேணிதனை விட்டுவையை மேவியநீர் மெல்லியலைக்
காணவரு வாரைப்போற் கண்ணுதலார் —மாணமையு
மங்கயற்க ணம்மை யறியாது வேற்றுருக்கொண்
டங்கடைந் தாற்று ரமைந்து. 202

தொன்றுய வேதமுமன் டோண்டியமா லுங்காணா
மென்று மிணைசிவப்ப வேள்பொடித்தார் —சென்று
ரழுக்கடைந்த தூசை யரைக்கிசைத்துத் தோளின்
மழுக்கடைந்த மண்வெட்டி வைத்து. 203

கூடற் றெருத்தோறுங் கூலியா ளென்றறைந்து
வாடியுறும் வந்திதெரு வாய்ச்சென்றார் —நாடியவ
ளப்பாநீ வேலைக் கமைவையோ வென்றுரைக்க
வொப்பாநின் றேதுவா ருற்று. 204

நின்பணியை முற்றுவிப்பே னீயளிக்குங் கூலிதனை
முன்பகரு வாயென்ன மூதாட்டி —யன்புடனே
வேண்டளவு பிட்டளிப்பேன் வேந்தனுண் மேவுமுவ
ராண்டடைவா யென்றறைந்தா ளால். 205

அன்னா யறப்பசித்தே னுனபிட்டிற் கொஞ்சமளி
யென்னா வரணிரக்க வேகியவள் —முன்னாகை
வட்ட நறும்பிட்டை யள்ளிக் கொடுவந்தே
யிட்டனளங் கன்பா யிசைந்து. 206.

இசைத்த பழந்துணியி லேந்தியுண்டு சென்னி
யசைத்து நறுஞ்சுவைய தன்னாய் —பசித்தழுத
பாலருக்குத் தாயுதவும் பாலனைய தாலவாய்
மூலருக்கா மென்ன மொழிந்து. 207

தந்தைதா யில்லாத் தமியேற்கோர் தாய்போல
வந்தென் பசிகளைந்தாய் மாறாது —முந்தவே
வேலைத் தலைசென்றுன் வேலைதனை முற்றுவிப்பேன்
மாலைத் தவிரென்றார் மற்று. 208.

சிந்தை மகிழ்சிறக்கச் செப்பியவன் சென்றடைந்து
வந்தியா ளென்று வரைவித்தார் —வந்தடைய
லுற்றார் தலைவரென வுள்ளத்தி லானந்தம்
பெற்றாள்போற் கங்கைவந்தாள் பேர்ந்து. 209.

வெட்டுவார் மண்ணை விரைந்தெடுத்துக் கொண்டுபோய்க்
கொட்டுவார் போலக் குறுகுவார் —பிட்டைவாய்
வைத்துமெல்லு வார்பிறரை வம்மி னெனவழைப்பா
ரெய்த்தவரைப் போலயர்வா ரேய்ந்து. 210.

சென்றயன்முன் காணாத சென்னிதனை மண்கூடை
யன்றுகா ணும்படியா வாங்குமுடி —யொன்றவே
கொண்டுபார் மின்னுள் குலவப் படிமீது
கண்டுயில லுற்றார் களைத்து. 211.

கூடுவார் தம்மனத்தைக் கொள்ளைகொள்ள வங்கிருந்து
பாடுவா ரொன்றைப் பறிகொடுத்துத் —தேடுவார்
தன்மைத்தா யோடுவார் சார்ந்துடனே மீளுவா
ருன்மத்தர் போலங் குவந்து. 212.

விஞ்சக் களைத்தவர்போன் மென்மூச் செறிந்தவரும்
பஞ்சொக்குங் கூந்தலாள் பாற்செல்ல —வஞ்சியவள்
வெள்ள மடைத்தனையோ வேண்டுவதென் னென்றுரைக்க
வுள்ள மகிழ்ந்துரைப்பா ருற்று. 213.

அன்னாய் கரைக ளடைக்கப் படுகின்ற
வென்னனி வெம்பசியா லெய்த்ததனை —முன்னாநீ
யீந்த சுவைப்பிட்டி னின்னுஞ் சிறிதுண்ணப்
போந்தனனிங் கென்றார் புலர்ந்து. 214.

அன்னாள்கேட் டப்பொழுதி லட்ட சுவைப் பிட்டளிக்கச்
செந்நாவுங் கைத்தலமுந் தீயெழவே —யென்னாதர்
கொண்டுவாய்ப் பெய்து கொடிறுகளை யொற்றியே
யுண்டுவான் வையைதனை யுற்று. 215.

வெட்டினார் மண்ணதனை வேறொருவர் பங்கிற்போய்க்
கொட்டினார் பாடினார் கூடிக்கை —தட்டினார்
நீரின் மிதந்தோடி நீந்தினார் பிட்டெவர்க்கும்
வாரி யளித்தார் மகிழ்ந்து. 216.

வந்தி பகுதி வழியாக நீர்பெருகி
வந்துபிற ராங்கோர் மலைபோல —முந்தியமை
பேரணையைக் கல்லிப் பிரவாக மாயோங்கக்
காரணமு மாங்குள்ளார் கண்டு. 217.

மன்னற் கறிவிக்க மற்றவனு மாங்கெய்தி
யுன்னியவப் பங்குக் குரியார்யா —ரென்னவே
வந்தியாள் பங்காகும் வந்தவளுக் காகப்பேர்
தந்தொருவ னுள்ளான் றனித்து. 218.

இட்டபணி செய்யா னிருந்தாரை யுங்கெடுப்பான்
கட்டழகை நோக்கியாங் கண்டிக்க —விட்டமிலை
யென்னப் புகன்றவனு மின்னு னெனமன்னன்
முன்னர்க் கொடுவந்தார் மொய்த்து. 219.

பஞ்சவர்கோன் பார்த்திவனிப் பாரிலுள மானிடனோ
விஞ்சையனோ மேனிகொண்ட வேடனோ —நெஞ்சினு
லெண்ணவரி யானென் றெழிலிற்று னீடுபட்டுக்
கண்ணிமையா தேயிருந்தான் கண்டு. 220.

இறைவன் சினந்தவரை யேடாநின் பங்கை
பிறையு மடைத்திலையே னென்னப் —பிறைமுடியா
ருற்றவிடை யொன்று முரையா துறக்கண்டு
கொற்றவனு முள்ளங் கொதித்து. 221.

கையிற் பிரம்போங்கிக் காய்ந்து வெரிநிடையே
யையப் புடைத்தா னமதிறைவர் —வையையிடை
மண்ணிலொரு கூடைதனை வாரிப்போ கட்டடனே
கண்ணினுாறு தாற்றூர் கரந்து. 222.

பட்ட வடியந்தப் பார்த்திபன்மேற் படடதவன்
மட்டவிழுங் கூந்தன் மனைவியர்மேற் —பட்டதொடு
பூவுலகி லுள்ள பொருளனைத்து மவ்வடியை
மேவினவே கூறுவதென் மேல். 223.

மாலயனு மிந்திரனு மற்றுள்ள தேவர்களுஞ்
சீலமுறு மெய்த்தவருஞ் சித்தர்களு —மேலிடத்து
நண்ணும் பிறருங்கீழ் நாகரும்பட் டாரெங்க
ளண்ணலார் பட்ட வடி. 224.

வையைநீர் வற்றியது வானகத்தில் வந்தியோர்
செய்யவிமா னத்திற் றிகழ்ந்தேக —வையகத்தி
னுற்றவரு மன்னவனு மோகையுட னோக்கினார்
பெற்றறியா வானந்தம் பெற்று. 225.

மன்னகேள் வாதவூர் வள்ளறா னின்பொருளை
யென்னுடைய வாலயத்துக் கீந்துவந்தா —னன்னதைநீ
தேரா தவனைச் சிறையிட்டுத் தண்டித்தாய்
சீரா ரவன்றுயரைத் தேர்ந்து. 226.

காட்டுநரி யெல்லாங் கலினப் பரியாகக்
கூட்டியே வந்து கொடுத்தேமவ் —வீட்டமெலாம்
வாவுநரி யாக்கினேம் வையையிடை நீர்பெருக்க
மேவிடவே செய்தேம் விரைந்து. 227.

வந்திபே ரன்பிற்கு வந்தேங்கூ லிக்காளாத்
தந்தசுவைப் பிட்டதனைத் தானருந்தி —நொந்துறவே
நின்னுடைய கைப்பிரம்பா னீண்டவடி யும்பெற்றே
மென்னுமொழி வானெழுந்த தே. 228.

மன்ன னிதுகேட்டு வாதவூர் வள்ளலிடைத்
துன்னியிரு பாதந் தொழுதேத்தி —நன்னெறியீர்
பேதையான் செய்த பிழையைப் பொறுத்தருளி
யாதரிக்க வேண்டுமென்றா னங்கு. 229.

கொற்றவா நின்றன்னைக் கூடியதோர் காரணத்தாற்
பொற்றொடியோர் பாகன் புரிந்தவருள் —பெற்றாய்ந்தே
னென்றாங் கரசற் கியம்பித் துறவுகொண்டு
சென்றார் பெருந்துறையைச் சேர்ந்து. 230

ஆங்குக் குருந்தடியி லாசானைக் காணாதே
யேங்கிக் கதறி யெளியேனை —யீங்கிருத்தி
யன்பருட னெங்கொளித்தா யாண்டவனே யென்றழுதா
ரென்புருகப் பாட லிசைத்து. 231.

ஓதுவா ருள்ள முருகப் பசுந்தமிழிற்
காதலாய்ப் பாடல் கழறவே —பாதிமதி
வேணிமிசைக் கொண்டார் விடைமீ தவணெழுந்தார்
பேணுகணத் தார்சூழப் பெற்று. 232.

கண்ணு மழனீரி னுப்பண் கனலெழவே
யெண்ணினா ரீச ரெழுந்ததது —பண்ணாமைய
வவ்வழலின் மூழ்க வடியார்க் கவரிசைக்க
வவ்விதமே செய்தா ரவர். 233.

சொற்றபடி மூழ்கியவர் சூழுங் கணவடிவம்
பெற்றுவான் சென்றடைந்தார் பின்னரனு —ற்றதிரு
வாதவூ ராரீ வருவாய்தில் லைக்கெனவே
யோதி மறைந்தா ருரு. 234

திருவாத வூரர்நமைத் தில்லையுற வீச
னருளியதே தென்றவரு மன்பர் —பெருமையுடன்
சாருந் திருவுத் தரகோச மங்கைதனை
நேரங் கடைந்தார் நினைந்து. 235

அன்று குருந்தடியி லாட்கொண்ட வவ்வுருவந்
துன்றப் பெருமானைத் தோத்திரித்துச் —சென்றடிகள்
கன்னிநாட் டுத்தலங்கள் கண்டு தரிசித்துச்
சென்னிநா டுற்றார் சிறந்து. 236.

பண்டைத் தலமனைத்தும் பார்த்துத் தொழுதிறைஞ்சித்
தொண்டைநா டுற்றார் தொழுதடிகள் —கொண்டநெடுங்
காதலொடு தில்லையினைக் காணவே சென்றடைந்தா
ரோதுதமிழ் மாலை யுரைத்து. 237.

போதப் பொலிவோடும் பொன்னம் பலத்தாடு
நாதனடி யேத்தி நயம்பெருக —வோதலுறுங்
கண்டபத்தே யாதி கழறியோர் பூங்காவின்
மண்டுகளி யோடிருந்தார் வாழ்ந்து. 238.

அல்லும் பகலுமிவ ரம்பலவா ணற்றொழுதே
யெல்லையிலா வானந்த மெய்ந்தமையத் —தில்லைநகர்
விட்டொருவ ரீழத்தை மேவவவர் சொல்லாற்புண்
பட்டுருமி னார்புத்தர் பாய்ந்து. 239.

இங்கெலாங் கூடித் திரண்டனபோற் சாக்கியர்க
ளாங்குடனே பொங்கியெழுந் தாசானுந் —தாங்கிவரு
மன்னவனும் பின்பற்ற வந்தடைந்தார் தில்லைமே
லென்னவரு மென்றுணரா தே 240.

போயவரு மம்பலத்திற் போதிமர மும்புத்தர்
தூயுருவும் வைக்கத் தொடங்கினா —ராயவிதை
யந்தணரெல் லாந்தடுத்து மாகாது போகவே
சிந்தைமிக நொந்தார் திகைத்து. 241.

சொல்லாற் பயனின்றிச் சோழவள நாட்டிறைவற்
கெல்லாச் செயலு மெடுத்தெழுதி —வல்லாரு
முய்த்தா ரொருமுடங்க லோடினார் பெற்றதனை
வைத்தார் வளவனெதிர் வந்து. 242.

வேந்தன் முடங்கல் விவரமெலாந் தேர்ந்துடனே
போந்தனனங் குற்ற பொழுதவரு —நேர்ந்தவெலாஞ்
செப்ப விறைவன் சிவனருள்பொய் யாதெனவே
யொப்ப விசைத்தா னுவந்து. 243.

அற்றையவர் தூங்கெல்லை யம்பலவா ணப்பெருமான்
மற்றிதுவுங் கூறுவான் வாதவூர் —நற்றவனைச்
சாருவி ராகிலந்தச் சாக்கியரை வென்றுசய
நேருவி ரையமிலை நீர். 244.

என்னநட ராச னியம்புதலு மந்தணர்கள்
மன்னவனுக் கிதுரைத்து மற்றவனைத் —துன்னவுடன்
கொண்டுமணி வாசகர்பாற் கூறினார் தாங்கனவிற்
கண்டசெய லெல்லாங் கசிந்து. 245.

வாதவூ ரார்கேட்டு மாணிக்க வாசகனென்
றோதவிவ ரெவ்வா றுணர்ந்தாரென் —றாதனே
யன்றியெவ ருந்தேறு ரன்னான் பணியீதா
மென்றுடனே வந்தா ரிசைந்து. 246.

பொன்னம் பலமடைந்து போற்றியோர் மண்டபத்திற்
பொன்னிவள நாட்டுப் புரவலனுந் —துன்னிவரு
மந்தணருஞ் சூழ வமைந்தார் விமலர்பாற்
சிந்தைவரு மாமதிபோற் சேர்ந்து. 247.

பூதி புனையாப் புலையர்முகம் பார்க்கவஞ்சி
வாதவூ ராரெழினி வைப்பித்து —வாதமிடுஞ்
சாக்கியர்க ளோர்புறமுந் தாமோர் புறமுமிருந்
தூக்கமொடு வாதிட்டா ருற்று. 248.

அன்னார் மதக்கொள்கை யத்தனையுங் கண்டித்து
மின்னார் சடையாரின் மேன்மைகளை —முன்னாக
வுள்ளங்கை நெல்லியென வோதவீ ழக்கரச
னுள்ளங் கவன்றுரைப்பா ரென்று. 249.

உங்களில்யா ரெம்மகளி னூமைக் குணமொழிப்பா
ரங்கவரே மேலோ ரவர்சமயந் —துங்கமுறுஞ்
சற்சமய மாகுமெனச் சாற்றுதலும் புத்தரெலா
நற்சபத மென்றார் நகைத்து. 250.

வாதமுறும் புத்தரெலா மந்திரங்க ளோயாம
லோதினார் மூகை யொழிந்திலதா —னதனும்
புத்தனே காப்பையெனப் போற்றியுமின் பேசவிலை
சித்தமவ ரெய்த்தார் திகைத்து. 251.

ஆத்திமலர்த் தாரானிவ் வாயிழையின் வாய்மலரும்
முத்துமொழி கூறினிந்தப் புத்தருக்கு —வாய்த்ததொரு
தண்டமே தென்னச் சமைந்தவருஞ் செக்கிலிட்டுத்
துண்டமுறச் சுற்றுமென்றார் சூழ்ந்து. 252.

மன்னன் மகிழ்ந்துடனே வாதவூ ரார்க்குறுகி
மின்னிடையாண் மூகை விலகவே —பின்னருளைத்
தந்தருள வேண்டுமெனச் சாற்றுதலு மெம்மிறைவர்
சிந்தையுவந் தொப்பினார் தேர்ந்து. 25

தூயதிரு நீறளித்துச் சொல்லும் வினாக்களுக்
காய விடையளிக்க வாக்கினரான் —மேயவதைப்
பைந்தமிழிற் சாழலாப் பாடினார் வாதவூர்
வந்தருளு மன்பர் மகிழ்ந்து. 254.

இன்னவரு மென்றுணரா தேபுகன்ற புத்தர்சிலர்
சொன்னபடி செக்கிற் றொலைந்தனரான் —மன்னவனுஞ்
சைவனா மாறினான் சார்ந்தவரு மவ்வாறே
மெய்வழியைக் கொண்டார் விழைந்து. 255.

உற்றவரை யெல்லா முறைவிடங்கட் குய்த்துப்பி
னற்றவரு மன்று ணடமாடுஞ் —சிற்றிடையோர்
பங்க னடிபரவிப் பன்னசா லைக்கடைந்தார்
மங்கலமார் சைவம் வளர்த்து. 256.

ஆங்கவரும் வாழ்நாளி லம்பலவா ணப்பெருமா
னோங்குமறை யோரி னுருக்கொண்டு —பாங்குபெற
வேடுமெழுத் தாணியுங்கை யேந்தி யவர்முன்னர்ப்
பீடுபெறச் சென்றடைந்தார் பின். 257.

ஐய ரவரைக்கண் டந்தணரே நீர்யாரோ
செய்யுமொரு காரியமென் செப்புமெனத் —துய்யரோ
சீரார் பெருந்துறையிற் சேர்ந்துறையும் வேதியன்யா
னோராசை யாலடைந்தே னுற்று. 258.

மற்றதுவு நும்மின் மணிவாசக மதனை
முற்றும் வரைந்தேக முன்னினே —னற்றவா
வுள்ள முவந்தே யுரைத்தருள வேண்டுமென
வள்ளலார் சொல்வார் மகிழ்ந்து. 259.

ஓதியமெய் வாசகங்க ளோாநமச்சி வாயமே
யாதியா யாத்திரைப்பத் தந்தமுற —வாதவூர்
வள்ளலார் சொல்ல மறையவர்யா வுந்தீட்டி
யின்னுவார் மற்றென்று மேல். 260.

கூறுந் துறையமைந்த கோவையொன்று செப்புமென
ஆறுஞ் சுவையொழுக வோர்கோவை —யாறணியுஞ்
சிற்றம் பலத்தாடுந் தேவ ருளமகிழ
சொற்றனரன் பூறத் தொடுத்து. 261.

மற்றதனை முற்றெழுதி வாதவூ ரானுரைக்கச்
சிற்றம் பலவாணன் றீட்டியது —முற்றுமெனக்
கையெழுத்து மிட்டுடனே காப்பிட்டுக் கொண்டகன்றார்
மையழுத்துங் கண்டனார் வந்து. 262.

தில்லைவா ழீசன் றிசைமுகத்தோ ராதியரை
யொல்லையவண் கூயிதுவு மோதுவான் —சொல்லரிய
வென்னுடைய வன்ப னிசைத்ததெனக் காட்டியதை
மன்னியமைக் காப்பிட்டார் வைத்து. 263.

பன்னுந் திருமுறையைப் பஞ்சாக் கரப்படியின்
மன்னவரன் வைக்க மறுநாளின் —முன்னுமறை
யிற்பனர்கண் டேட்டை வியந்து பிரித்ததிலே
யற்புதன்கைச் சாத்துங்கண் டார். 264.

தில்லைவா ழந்தணரிச் செய்கை தனைநோக்கி
யெல்லையிலா வானந்த மெய்தியே —வல்லையவர்
போற்றுந் திருமுறையைப்பொற்சிவிகை யேற்றிப்போய்ச்
சாற்றுமணி வாசகரைச் சார்ந்து. 265.

என்று மிதன்பொருளை யெங்கட் குணர்த்துமென
வன்று ருடனவரு மம்பலத்தின் —முன்றடி
யீதே பொருளாகு மென்றிசைத்துச் சோதியிலப்
போதே மறைந்தார் புகுந்து 266

அண்டர் மலர்மாரி பல்லி யியைந்தொலித்தார்
கண்டமறை யோரெல்லாங் கைகுவித்துத் —கொண்ட
வாழிமணி வாசகரும் வாழிதிரு வாசகமும் | லெலாம்
வாழியென வாழ்த்தினார் மன். 267

ஸ்ரீமாணிக்கவாசக வெண்பா முற்றிற்று.